**தலைப்பு 229 – சட்டமா அதிபர் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சட்டமா அதிபர் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும், அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 30 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் நீதி நிர்வாகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 05 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சட்டமா அதிபர் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும், நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் , மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19ம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள் , செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்செல்வதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு, அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஓட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ, கூட்டாகவோ தாக்கமளிப்பதால், பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு, பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தை இனங்காணும் போதும், மதிப்பீட்டின்போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச்செய்தல், மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும்போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் , சம்பவங்கள் பொருத்தமாகவும், நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் சென்ற ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) கடந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 வருமான பெறுவனவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சென்ற ஆண்டு இறுதி நிலுவை வருமான மிகுதி மற்றும் மீளாய்வாண்டு ஆரம்ப நிலுவை வருமான மீதிக்கிடையே ரூபா 6,665,211 க்கான வேறுபாடு நிலவியது. | கணக்குகளை மீள பரீட்சிக்கும் போது வெளியான விதத்தில் தவறுதலாக பற்றுச்சீட்டுக்கள் வருடங்களுக்கு இடையே மாறிபட்டு கணக்கிலிடப்பட்டு இருந்தமையினை சரி செய்யப்பட்டமை இவ் வேறுபாட்டிற்கு காரணமாக உள்ளது. | நிதிக் கூற்றுக்களில் ஆரம்ப மீதிகள் சரியாக காட்டப்படல் வேண்டும். |
| (ஆ) | நிலுவை வருமான மீதிக்கான நிதிக்கூற்று மற்றும் அட்டவணைக் கிடையில் ரூபா 45,000 க்கான வேறுபாடு நிலவியது. | உள்ளூராட்சி சபை ஒன்றினால் செலுத்தப்பட்டிருந்த ரூபா 45,000 க்கான பற்றுச்சீட்டு தவறுதலாக நிலுவை வருமானமாக பதியப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் சரியாக சரியாக சீர்செய்யப்படல் வேண்டும். |

### 1.6.2 மீண்டெழும் செலவினங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிப்பிரமாணம் 65(1) பிரகாரம் செலவின விடயங்களுக்கு உரிய செலவினங்களை சம்பந்தப்பட்ட செலவினங்களிலேயே கணக்கிலிடப்பட வேண்டி இருந்த போதிலும் மீளாய்வாண்டில் மாற்று பத்திரங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்களின் பின் சம்பந்தப்பட்ட செலவின விடயங்களுக்கு சம்பந்தப்படாத ரூபா 13,225,523, 25 சந்தர்ப்பங்களில் வேறு விடயங்களில் கணக்கிலிடப்பட்டு இருந்தது. | 2020 வருடம் 03 இடைக்கால நிறைவுறு கணக்குகளின் மூலம் திசெம்பர் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவு மூலம் 2020 வருடத்திற்கான நிதி ஒதுக்கீடுகுள் ஒதுக்கப்பட்டன. இரண்டாம் மற்றும் மூன்றாலம் இடைக்கால நிறைவுறு கணக்குகளின் மூலம் சில மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஒதுக்கீடுகள் அக்காலவரைக்கு போதுமானதாக இல்லாத சந்தர்ப்பங்களில் எதிர்வரும் இடைக்கால நிறைவுறு கணக்குகளிலிருந்து ஒதுக்கீடுகள் பெற்றுக் கொள்ளும் வரை, ஒதுக்கீடுகள் மீதமுள்ள ஏனைய மீண்டெழு செலவின விடயங்களில் வரவு வைக்கப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. நான்காம் காலாண்டுக்காக சம்பந்தப்பட்ட செலவின விடயங்களுக்கு ஒதுக்கீடுகள் ஏற்படுத்திக் கொண்டதன் பின்னர் 19 மாற்றுப் பத்திரங்கள் மூலமாக சம்பந்தப்பட்ட கணக்குப் பதிவுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ள படியால் தங்கள் கணக்காய்வு விசாரிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று செலவின விடயங்களில் பிறழ் பற்றுப் பதிவுகள் நடந்தில்லை என்பதனை அறியத் தருகின்றேன். | அவ்வந்த விடயங்களுக்கு உரிய செலவினங்கள் சம்பந்தப்பட்ட செலவின விடயங்களுக்கே கணக்கிலிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மேலும், சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்ட அதிகாரிகளுக்கு உரிய பிரயாணச் செலவு கொடுப்பனவுகள் கணக்கிலி பதிவிடுவது 1401 போக்குவரத்து சேவை செலவின விடயத்தின் கீழாகும். கணக்காய்வு விசாரிப்பில் குறித்துள்ள 1401 செலவின விடயத்தின் கீழ் கணக்கிலிடப்பட்டுள்ள செலவினங்கள், வெளி இடங்களுக்கு கடமையில் செல்லும் சட்டமா அதிகாரிகளுக்கு செலுத்தப்படும் பிரயாண செலவுக்கான கொடுப்பனவுகள் என்தனை அறியத் தருகின்றேன். | |

**1.6.3 மூலதன செலவினங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் மூலதன சொத்துக்கள் கையேற்றல் ரூபா 51,954,296 ஆக இருப்பினும் நிதி அல்லாத சொத்துக்களுக்கான கூற்றில் ரூபா 51,862,796 ஆக ரூபா 91,500 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | சம்பந்தப்பட்ட சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் சிகாஸ் கணினி வேலைத்திட்டத்தில் நிதி அல்லாத சொத்துக்களுக்கான கூற்றில் உட்படுத்துவதனை தவற விட்டுள்ளதுடன் அதனை சரி செய்து நிதியல்லா சொத்துக்களுக்கான கூற்றினை இற்றைப்படுத்தி பேணிச் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். | சொத்துக்களை கையேற்றலினை சரியாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதியல்லா சொத்துக்களுக்கான கூற்றின் மீதிகள் மற்றும் திறைசேரியின் நிதியல்லா சொத்துக்களுக்கான கணக்குகளுக்கிடையே ரூபா 11,201,818 க்கான வேறுபாடு நிலவியது. | சம்பந்தப்பட்ட சொத்துக்கள் சிகாஸ் கணனி வேலைத் திட்டத்தில் உட்படுத்தும் போது நேர்ந்துள்ள தவறு இவ் வேறுபாடுகளுக்கு காரணமாக உள்ளது. | திணைக்கள கணக்குகள் திறைசேரி கணக்குகளுடன் இணங்குவதாக இருத்தல் வேண்டும். |
| (இ) | மூலதன செலவின ஒதுக்கீடுகளிலிருந்து ரூபா 600,394 க்கான மீண்டெழு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | கணக்காய்வு விசாரிப்பில் குறிக்கப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட செலவினங்கள் வவுனியா மற்றும் மன்னார் வழக்கறிஞர்களுக்காக உத்தியோகபூர்வ இல்ங்களை நிர்மாணிப்பதற்குரிய நிர்வாக செலவினங்கள் ஆவதுடன் அந்நிர்வாக செலவினங்கள் ஆவதுடன் அந்நிர்வாக செலவினங்கள் சம்பந்தப்பட்ட திட்டங்களின் மதிப்பீடுகளில் உட்படுத்தியுள்ள செலவினங்களாகும். | செலவினங்களை உரிய செலவின விடயங்களில் கணக்கிலிடப்பட வேண்டும். |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களில் இழப்புக்கள் மற்றும் விடுபட்டவை மீதான கூற்றில் மீளாய்வாண்டில் 38 மோட்டார் வாகனங்களுக்கு நேர்ந்த விபத்தினை பதியப்பட்டில்லாது இருந்ததுடன் அதில் 29 வாகனங்களுக்கான மதிப்பீட்டு இழப்பு ரூபா 1,146,964 ஆகும். | திணைக்களத்திற்கு உரிய வாகனங்களுக்கு ஏற்படும் சகல விதமான திடீர் விபத்துக்களையும் திடீர் விபத்துக்களுக்கான அட்டவணையில் பதியப்படுவதுடன் சேதங்கள் மற்றும் இழப்புக்களுக்கான அட்டவணையில் இதுவரை பதியப்பட்டிருப்பது, விபத்து தொடர்பாக காசோலையினை சட்டமா அதிபர் பெயரில் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் மாத்திரமாகும். எதிர்காலத்தில் சகல விபத்துக்களுக்குமான விபரங்கள் சேதம் மற்றும் இழப்புக்களுக்கான அட்டவணையில் பதிவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வருடத்தில் ஏற்படும் மோட்டார் வாகன இழப்புக்களை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) வருமானங்களை அறவீடு செய்தல் | | |
| சென்ற வருடம் மற்றும் அதற்கு முன்னைய வருடங்களில் நிலுவை வருமானமான ரூபா 223,535,446 வில் மீளாய்வாண்டில்ல ரூபா 37,279,838 அறவிடப்பட்டிருந்த போதிலும் வருட இறுதியில் மொத்த மீதி ரூபா 308,831,925 ஆக இருந்தது. | சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டத்தால் தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களுக்கு அவர்களின் வேண்டுகோளின் படி சட்ட ஆலோசனை வழங்கல் மற்றும் நீதிமன்றங்களில் ஆஜரானதற்கான அந்நிறுவனங்களிடமிருந்து மேற்கொள்ளப்படும் அறவிடல்கள் சட்டமா அதிபரின் வருமானக் கணக்கில் வரவு வைக்கப்படும். சம்பந்தப்பட்ட பற்றுச்சீட்டுக்களை அந்நிறுவனங்களுக்கு உரிய முறையில் முன் வைக்கப்பட்டாலும் செலுத்தல்கள் மேற்கொள்வதில் தாமதங்கள் ஏற்படுவதாயினும் அவைகள் அரச நிறுவனங்கள் ஆகின்ற படியால் தேவையான சட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்வதுடன் கட்டணங்களை துரிதமாக அறவிடப்படுவதற்காக இடையிடையே நினைவூட்டல் மேற்கொள்ளப்படுகின்றது. | அரசுக்கு அறவிடப்பட வேண்டிய வருமானங்களினை கால தாமதமின்றி அறவிடப்பட வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வருமான நிலைமைகளினை காலத்திற்குக் காலம் மீளாய்வு மேற்கொள்ளப்படாமை<br>---------------------------------------------<br>2015 யூலை 20 ஆந் திகதிய இலக்கம் 01/2015 கொண்ட அரச நிதி கொள்கைக்கான சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் தற்போதைய பொருளாதார நிலைமைகளில் உள்ள முரண்பாட்டினை கவனத்திற் கொண்டு சேவைகளுக்காக அறவிடப்படும் கட்டணங்கள், அச்சேவைகளை வழங்குவதற்கான செலவினங்களையும் கவனத்தில் கொள்ளப்பட்டு காலத்திற்கு ஏற்றவாறு திருத்தப்பட் வேண்டும். மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் பில் இடப்பட்ட வருமானம் ரூபா 101,349,896 ஆக இருந்ததுடன் வசூலிக்கப்பட்ட வருமானம் ரூபா 62,764,949 ஆக இருந்தது. மீளாய்வாண்டில் செலவின பேரேட்டின் படி வருமானம் வசூலிப்பதற்காக கூட்டுத்தாபனத்திற்கான செலவினம் இல்லாது ரூபா 85,518,640 செலவிடப்பட்டிருந்த மையினால் அதனால் அரசாங்க நிதிசார் அனுகூலம் ஏற்பட்டுள்ளதா என்பது பிரச்சினைக்குரிய தாக இருந்தது. | கூட்டுத்தாபன பிரிவில் உழைக்கப்பெற்ற வருமானம், அப்பிரிவின் செலவினத்தினை விஞ்சப்பட்டள்ளதால் நிதிசார் இழப்பு ஏற்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனப் பிரிவின் உண்மையான செலவினத்தை சரியாக இனங்காணப்படல் வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நிதிப்பிரமாணம் இலக்கம் 50 இன் பிரகாரம் மதிப்பீடுகள் தயாரிக்கப்படாமையினால் மீளாய்வாண்டில் மூலதன செலவின விடயமொன்றில் ரூபா 23,000,000 க்கான ஒதுக்கீடு வேறொரு மூலதன செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | நிர்மாணப் பணிகளை முடிக்கப்பட்டிருந்த சட்டமா அதிபர் திணைக்களத்தின் புதுக்கட்டிடத்திற்கு தேவைப்படும் மரத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கான பெறுகை செயற்பாடுகள் நாட்டினுள் நிலவிய கொவிட் தொற்று காரணமாக மேற்கொள்ள முடியாது போனமையினால் அதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஒதுக்கீடுகள் சேமிக்கப்பட்டன. அதற்கிடையில் அநுராதபுர மற்றும் வவுனியாவில் உள்ள அரச சட்டத்தரணிகளின் உத்தியோகபூர்வ இல்லங்களில் ஏற்பட்ட திடீர் மற்றும் அத்தியாவசிய திருத்த வேலைகளை மேற்கொண்ட அரச கட்டிட திணைக்களத்திற்கு செலுத்துவதற்காக மேற்படி மீதியாக இருந்த ஒதுக்கீடுகளிலிருந்து ஒரு பகுதியினை மாற்றிக் கொள்ளப்பட்டது. | உண்மையானதும் சரியானதுமான மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) கொவிட 19 தொற்று நிலைமை காரணமாக மீளாய்வாண்டில் அதிக காலம் அலுவல்கள் மூடப்பட்டிருந்த போதிலும் குறைந்தபட்ச பணிக் குழாமினை வேலைக்கு அமர்த்தப்பட்டு வேலைகள் மேற்கொண்டிருந்த போதிலும், 09 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக வகுக்கப்பட்டிருந்த மொத்த | அரசின் கொள்கையளவிலான தீர்மானத்தின் படி சட்ட செயற்பாடுகளை துரிதப்படுத்தும் நோக்குடன் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்ட அதிகாரிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2020 வருடத்தினுள் செயலாற்றப்பட்டது. சட்ட அதிகாரிகளுக்கு எரிபொருள், பிரயாணச்செலவு, | மதிநுட்பத்துடன் செலவின முகாமைத்துவத் தினை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

ஒதுக்கீடுகளும் முடிவடைந்திருந்தன. மூலதன சொத்துக்களை கையேற்பதற்காக வகுக்கப்பட்டிருந்த ஒதுக்கீடுகளிலிருந்து நூற்றுக்கு 21 முதல் நூற்றுக்கு 91 வரையிலான வீச்சுக்களில் சேமிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

எழுதுபொருள் சகிதம் ஏனைய கொடுப்பனவுகள் செலுத்துவதற்கு தேவையான செலவுகள் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவினங்கள் வருடாந்த வரவு செலவு மதிப்பீட்டினை தயாரிக்கும் பொழுது கவனத்தில் கொள்ளப்பட்ட போதும் திறைசேரியினால் அவ்வொதுக்கீடுகள் 2020 திசெம்பர் மாதம் தயாரிக்கப்பட்டு இறுதி வரவு செலவு மதிப்பீட்டிற்கு உட்படுத்தாதிருந்த காரணத்தால் நிலவிய ஒதுக்கீட்டு குறைபாடுகள் அலுலவலகங்கள் மூடப்பட்டிருந்தமையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடுகளிலிருந்து முகாமைத்துவம் மேற்கொள்ளப்படக் கூடியதாக இருந்ததுடன் ஒதுக்கீடுகள் சேமிக்கப்பட்டிருக்கவில்லை. கட்டிடப் பணிகள் முடிக்கப்பட்டிருந்த சட்டமா அதிபர் திணைக்களத்தின் புது கட்டிடத்திற்கு தேவையான மரத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்குமான பெறுகை செயற்பாடுகள் நாட்டில் நிலவிய கொவிட் தொற்று காரணமாக மேற்கொள்ள இயலாது போயிருந்தமையினால் அதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஒதுக்கீடுகள் சேமிக்கப்பட்டிருந்தன.

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் உடன்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2019 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 02/2020 கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்திப் பிரகாரம் திறைசேரிக்கு அறிவிக்கப்படாத எந்தவொரு இணக்கப்பாடு அல்லது பொறுப்பும் 2021 வருடத்தில் தீர்க்கப்படாது இருக்க வேண்டிய போதிலும் திறைசேரிக்கு அறிவிக்கப்படாத ரூபா 3,604,295 க்கான பொறுப்புக்களுக்கு 2021 வருடத்தில் பணம் செலுத்தப்பட்டிருந்தது. | பொறுப்புக்களாக ரூபா 38,650,385 மாத்திரம் அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஆலோசனைப் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 94(1) ற்கு முரணாக 03 செலவின விடயங்களுக்கு ஒதுக்கங்களை விஞ்சியதாக ரூபா 3,404,730 ஆன பொறுப்புக்களுக்கு உடன்பட்டிருந்தது. | திணைக்களத்திற்குத் தேவையான மீண்டெழும் செலவினங்கள் வருடாந்த வரவு செலவு மதிப்பீடு தயாரிக்கும்போது கருத்திற கொள்ளப்பட வேண்டியபோதிலும் திறைசேரியினால் அந்த ஒதுக்கங்கள் 2020 திசெம்பர் மாதம் தயாரிக்கப்பட்ட இறுதி வரவு செலவு மதிப்பீட்டில் உள்ளடக்கப்படாமையினால் ஒதுக்கங்களில் பற்றாக்குறை காணப்பட்டதால் குறிப்பிட்ட செலவுகளுக்கு உடன்பட வேண்டி இருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2.4 சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவைகளுடன் இணங்காமை

கீழ் குறிக்கப்பட்டுள்ள சட்டம், ஒழுங்கு, பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

### கணக்காய்வு அவதானிப்புக்கள்

| சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவற்றிற்கான கவனத்திற்கு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (அ) நிதிப் பிரமாணம் 104/(1)அ | மீளாய்வாண்டுடன் தொடர்புடைய 38 மோட்டார் வாகன விபத்துக்கள் தொடர்பாக ஆரம்பகட்ட பரீட்சிப்பாவது மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | விபத்துக்குள்ளான காரணத்தினால் இழப்பு அல்லது நட்டம் ஏற்படும் எல்லா வேளையிலும் நிதிப்பிரமாணத்தின் படி பரீட்சிப்பு மேற்கொள்ளப்படுவது இல்லை. அத்துடன் விபத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்த வேலைகளுக்கான செலவினங்களை முற்றாக காப்புறுதியிலிருந்து அறவிடப்பட முடியாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் நிதிப்பிரமாணத்தின் படி பரீட்சிப்பு மேற்கொள்ளப்படும். | நிதிப்பிரமாணத்தின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 880(1) | திணைக்களத்தில் பிணை வைக்கப்பட வேண்டிய 04 அதிகாரிகளிடமிருந்து பிணை வைப்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பிணை வைப்புக்கான நடவடிக்கையினை செயற்படுத்துவதற்கு தேவையான ஆலோசனை அமைச்சிடமிருந்து கோரப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் படி செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 02/2020 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் 10.2 பந்தியின் பிரகாரம் பொது நிதி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டல் இலக்கம் 14 இல் குறித்துள்ள படிவத்தின் படி வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் வரைவொன்றினை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 வருடத்திற்கான வருடாந்த செயலாற்று அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதுடன் கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக அறிக்கையினை பூரணப்படுத்துவதற்கு இயலாது போய் இருப்பதுடன் துரிதமாக அதனை தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கையினை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை அரசு, அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டத்தால் தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றிற்கு தேவையான சகல விதமான சட்ட சேவைகள் மற்றும் சட்ட ஆலோசனைகள் துரிதமாக வழங்குதல் மற்றும் அரசின் விசால நோக்கினை பரப்புவதில் மிக விசேட செயற்பாட்டினைக்கு பங்களிப்பினை பெற்றுக் கொடுக்கும் சிரேஷ்ட தரத்திலான 271 பதவிகள் அதாவது நூற்றுக்கு 54 க்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளாது இருப்பது திணைக்களத்தின் செயலாற்றல் மீது நேரடி தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடியதாக இருப்பதனை அவதானிக்கப்பட்டது. | சட்ட அதிகாரிகளை ஆட்சேர்ப்புக்கான நேர்முக பரீட்சை முடிக்கப்பட்டுள்ளதுடன் நாட்டில் நிலவும் கொவிட் 19 தொற்று நிலை காரணமாக ஆட்சேர்ப்பு நடவடிக்கை தாமதப்படுத்தப்பட்டுள்ளது. | நிறுவனத்தின் நோக்கத்தினை மற்றும் பிரதான செயற்பாடுகள் பயனுள்ள வகையில் நிறைவேற்று வதற்காக சிரேஷ்ட தரத்திலான பதவிகளுக்கு, சம்பந்தப்பட்ட பணிக் குழாமிற்கு ஆட்சேர்ப்பினை முதன்மை காரியமாக கருதி செயற்பட வேண்டும். |